DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC No.440/2026**

Prosecution witness **PW.3 (LW.11)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Baskaran | Caste | : | |
| Father Name | : | Annamalai | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 56 |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **07.08.2026**

**07.08.2026 முதல் விசாரணை** :

1. நான் குன்னூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். கடந்த 18.04.2026 ம் தேதி 23.30 மடணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது உதகை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 முகமது இன்சாப் என்ற சிறுவனை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து மனு ரசீது எண்.67/2026 பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.79/2026 பிரிவுகள் 115(2) of BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்)** முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன்.

2. அன்றைய தினமே வழக்கு கோப்பை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.50 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மவுலின்

கிளாடிஸ் ஷகிலா மற்றும் மைக்கேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும்,. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். )** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். 28.04.2026 ம் தேதி அ.சா.1 க்கு சிகிச்சையளித்த குன்னூர் அரசு மருத்துவமனை மருத்துவர் பூஜா லேகோ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு, காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்தேன். **(அ.சா.1 ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது )** எனது விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரியவரவே புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 115(2) of BNS ன் கீழ் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :–

பொய்யான புகாரின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரி கைது செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.